தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 23, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, மே 6, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும்
தள்ளாமை நீர்த்து".

எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ணவேண்டும்; அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

1. வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்

(விதி 51-இன் கீழ், உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாதவையாக மாற்றப்பெற்று அவற்றுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்டுள்ள விடைகளுடன் அவைமுன் வைவக்கப் பெற்றவை—பட்டியல்கள் 16 முதல் 22 வரை—இணைப்பு-1 ஆகச் (*143* ஆம் பக்கம் முதல் *737* ஆம் பக்கம் வரை) சேர்க்கப்பட்டுள்ளன.

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

திருச்சி மத்திய சிறையில் கைதி மரணமுற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி அவர்களும், திரு. அ. செல்வராசன் அவர்களும் திருச்சி மத்திய சிறையில் இருந்த கைதி

ஒருவர் மரணமடைந்திருப்பது குறித்த பிரச்சனையைப் பேரவையில் எழுப்பி, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கோரி என்னிடத்திலே அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். இன்று இந்தப் பிரச்சனையை எடுத்துக் கொள்வதற்கு மற்ற நாட்களைப்போல் அல்லாது கேள்வி நேரம் முடிந்து எடுத்துக்கொள்கிற அளவுக்கு அவகாசம் இல்லாத காரணத்தாலும், அதே நேரத்தில் அவர்கள் பிரச்சனை முக்கியமானது என்று தெரிவித்து இருக்கிற காரணத்தாலும், சிறப்புக் கவன ஈர்ப்பாகப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். அந்தப் பிரச்சனையை இப்பொழுது பேரவையில் எழுப்பி அரசின் கவனத்தை ஈர்க்க அனுமதிக்கிறேன். திரு. அ. செல்வராசன்.

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-5-1995 ஆம் நாளன்று நடைப்பெற்ற முழு அடைப்பு போராட்டத்தில் முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்ட வரகனேரி சின்னாச்சியார் கோயில் தெருவைச் சேர்ந்த மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர் ஜாஹீர் ஹுசேன் - வயது 21 அவர்கள் திருச்சி சிறையில் காவலர்களால் படுமோசமாகத் தாக்கப்பட்டு இறந்திருக்கிறார். இதனால் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, `பந்த்'-தின்போது, முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்ட சிறைக் கைதி ஹுசேன் அவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு மரணமடைந்து இருக்கிறார். அதுகுறித்து விவாதிப்பதற்காக தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. செல்வராசன் அவர்களும், திரு. வே. தம்புசாமி அவர்களும் 4-5-1995 அன்று திருச்சி மத்திய சிறையில் கைது செய்யப்பட்டு காவலில் இருந்த திரு. ஹுசேன் என்பவர் மரணமடைந்துவிட்டார் என்ற தகவல்களை இங்கே உங்கள் மூலமாக இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். குறிப்பாக, இதுபோன்ற போராட்டக் காலங்களில் தடுப்புக் காவலாக பல்லாயிரம் பேர்களை கைது செய்வது என்பதும், அவர்களை ஒன்றிரண்டு

நாட்களுக்குப் பிறகு, அந்த வெப்பம், வேகம், போராட்டப் பதட்டம், கிளர்ச்சியினுடைய உத்வேகம் இவைகளெல்லாம் உலர்ந்த பிறகு வெளியே விடுவதும் வாடிக்கையான சம்பவம் ஆகும்.

மாண்புமிகு உறுப்பினர் செல்வராசன் அவர்களும், நானும் ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒன்றாக இருந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களையெல்லாம் வழிநடத்திய காலத்தில் ஒரு போராட்டத்தில் ஆயிரம் விளக்கு தொகுதியைச் சேர்ந்த ஒரு மாநகராட்சி உறுப்பினர் கோ. சு. மணி அவர்கள் எனது சகோதரர் மதி அவர்களோடு சிறைச்சாலைக்குச் சென்ற நேரத்திலே அவர்கள் மரணத்தை சென்னை சிறையிலே சந்தித்தார்கள்.

முற்பகல் 10-05

1991-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாண்புமிகு டாக்டர் நம்முடைய போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்களின் கட்டளையின்படி நாங்களெல்லாம் போராட்டத்திலே ஈடுபடுவதற்கு முன்பே, குறிப்பாகச் சொல்லப் போனால் 4 நாட்களுக்கு முன்பே, நான் திருநெல்வேலிக்கு சென்று கொண்டிருந்த நேரத்தில் விருதுநகரில் 12 மணி அளவிலே கைது செய்து 4 மணிக்குள் போலீஸினுடைய பாதுகாப்போடு மதுரைக்கு அழைத்து வந்து அங்கே காவலில் வைத்தார்கள். பிறகு மதுரை செஷன்ஸ் கோர்ட்டிலே புரடியூஸ் செய்து எனக்கு 15 நாட்கள் ரிமாண்டு வாங்கி கொடுத்த ஆட்சி முந்தைய ஆட்சி. அன்றைக்கு நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. எந்த வன்முறையிலும் ஈடுபடவில்லை. வஞ்சகச் சொல்லை என்னுடைய வாய் சொல்லவே இல்லை. ஆனாலும் என்மீது அன்றைய ஆட்சி போட்ட வழக்கு 307-ன் கீழ். அன்றைக்கு முதலமைச்சராக இருந்தவரை நான் கொல்ல முயன்று மதுரையிலே பேசியதாக என்னை Non-bailable offence-லே போட்டு மதுரை சிறைச்சாலையிலே அடைத்தார்கள். அடுத்த நாள் மதுரை, முகவை, பசும்பொன், காமராஜர், அண்ணா ஆகிய 5 பகுதிகளைச் சேர்ந்த ஏறத்தாழ 10,000 நபர்களை மதுரை சிறைச்சாலையிலே வைத்தார்கள். ஆனால், மதுரை சிறைச்சாலையினுடைய கொள்ளளவு, capacity எத்தனை சிறைவாசிகளை வைக்கலாம் என்றால்—2000 நபர்களைத் தான் வைக்கலாம். ஆனால் அங்கே 10,000 நபர்களை வைத்தார்கள்.

திண்டுக்கல்லிலே, பேகம்பூரிலே இஸ்லாமிய சகோதரர்கள் பெருவாரியாக வாழ்கின்ற அந்த பகுதியிலிருந்து ஒரு இஸ்லாமிய சகோதரரும் கைது செய்யப்பட்டு அங்கே வைக்கப்பட்டிருந்தார். அவரும் மதுரை மத்தியச் சிறையிலே மாண்டார்; மரணத்தை சந்தித்தார். 1991-லே போராட்டம்

கூட செய்யவில்லை. போராட்டம் செய்வதற்கு முன்பாகவே மூன்று நாட்களுக்கு முன்பே கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறைச்சாலையிலிருந்த திண்டுக்கல், பேகம்பூர் பகுதியைச் சேர்ந்த இஸ்லாமிய சகோதரர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர் அந்தப் போராட்டத்திலே உள்ளே வந்தவர், மரித்தார். ஆகவே, போராட்ட காலத்திலே எல்லா வசதிகளையும் செய்து தர முடியாது. என்றாலும்கூட முடிந்த அளவுக்குப் பாதுகாப்பு தர வேண்டும் என்று, `பந்த்' என்று அறிவித்தவுடனேயே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேவையான உணவுப் பொருட்கள், தேவையான தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுத்தார்கள். சிறைச்சாலைக்குள்ளே அவ்வளவு பேர்களை கொட்டகையிலே அடைக்க முடியாது. எனவே அவர்களை வெளியிலே வைக்க வேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பு, மருத்துவ வசதி, அதிகமான மருத்துவர்கள்-ஏனென்றால் 2000 நபர்கள் இருக்கிற இடத்திலே இன்னும் சில ஆயிரம் நபர்கள் வரக்கூடும் என்று அந்த முன்னெச்சரிக்கையோடு, வருமுன் காக்கின்ற அந்த உணர்வோடு, தமிழ்நாட்டிலே இருக்கிற 8 சிறைச்சாலைகளிலும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முன்னெச்சரிக்கையோடு நடவடிக்கை எடுத்தார்கள். என்றாலும் குறிப்பிடுகின்ற சகோதரர், எனக்குக் கிடைத்த தகவலின்படி அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலே, எப்படி 1991-ஆம் ஆண்டு மதுரை மத்தியச் சிறைச்சாலையிலே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. போராட்டத்தின்போது ஒரு இஸ்லாமிய சகோதரர் தவிர்க்க முடியாமல் இயற்கையின் கட்டாயத்தின்படி அன்றைக்கு அந்தக் கசப்பான முடிவை சந்தித்தாரோ அப்படிப்பட்ட முடிவுதான் திருச்சியிலே நடைபெற்றிருக்கிறதே தவிர மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதுபோல அடித்துக் கொல்லப்படவில்லை. அடிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதுவும் அடிக்க முடியுமா? முடியாது. அங்கே 10000 நபர்கள் இருக்கிறார்கள். காவலர்கள் 100 நபர்கள்தான் உள்ளார்கள். உங்களுக்குத் தெரியும். சாதாரண நேரமாக இருந்தால் கைதிகளை அடிக்கலாம். அவர்கள் கைதிகள் அல்ல. அரசியல் காரணத்திற்காக வருபவர்கள், எல்லா கட்சிகளையும் சேர்ந்தவர்கள். இன்னும் சொல்லப் போனால் 100 வார்டன்கள், 10000 பேர்களிடத்திலே பணிந்து போய் இருப்பார்களே தவிர, இணக்கமாக இருந்திருப்பார்களே தவிர, ஒத்துப்போய் இருப்பார்களே தவிர, 100 பேர்கள் 10000 பேர்களை எதிர்க்க முடியுமா? ஆகவே, அடித்தார்கள் என்று அரசியலுக்கு வேண்டுமானால் சொல்லலாமே தவிர, நியாயமாக மனசாட்சியோடு சொல்வதற்கு உகந்தது அல்ல; இது இயற்கையிலே நடந்தது என்று சொல்லிக் கொள்கிறேன். திண்டுக்கல் பேகம்பூரைச் சேர்ந்த புதூர் பாவா என்ற இஸ்லாமிய சகோதரர்தான்

மதுரை சிறைச்சாலையிலே மாண்டார் என்று சொல்லிக் கொள்கிறேன். அவரும் இஸ்லாமியர்தான், இவரும் இஸ்லாமியர்தான்.

அந்த இரங்கல் கூட்டத்தில் நான் பேசினேன். எங்கே? மத்திய சிறைச்சாலைக்கு உள்ளேயே இரங்கல் கூட்டம் போட்டு ஆறுதல் கூறி பேசினேன். 10 ஆயிரம் தொண்டர்களும் உடனிருந்தார்கள். ஆக, அடித்துக் கொல்லப்பட்டு இறந்தார் என்பதல்ல. அது இயற்கையினுடைய ஒரு சம்பவம். ஆனாலும்கூட, வருகின்றபோது இதற்காக, தெளிவான அறிக்கையை நான் ஐ.ஜி. இடத்திலே கேட்டிருக்கிறேன். இப்போது டி.ஐ.ஜி. அவர்கள் தகவலுடன் வந்து கொண்டிருக்கிறார்கள். என்றாலும்கூட, சம்பவம் அடித்துக் கொல்லப்பட்டது என்பதல்ல, இயற்கையினுடைய ஒரு நிகழ்வு என்பதை இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

3. கவன ஈர்ப்பு

(அ) கோவை, செல்வபுரம் வடக்கு வீட்டுவசதி வாரிய வீடுகளைப் பழுதுபார்க்க வேண்டிய அவசியம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.

திரு. கே. செல்வராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை, செல்வபுரம் வடக்கு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதி வீடுகள் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளதைப் பழுதுபார்க்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

1995 மே 6] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்ற நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் மேற்குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் ஆட்சி மன்றப் பேரவைகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

2. சிறப்புக் கவன ஈர்ப்பு — தொடர்ச்சி.

திருச்சி மத்திய சிறையில் கைதி மரணமுற்றது குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் காலையில் எழுப்பப்பட்ட ஒரு சிறப்பு கவன ஈர்ப்புக்குப் பதில் சொல்கிறபோது 'இன்னும் கூடுதலான தகவல்கள் வந்துகொண்டே இருக்கின்றன, அவை எனக்குக் கிடைக்கப் பெற்றவுடன் தெரிவிக்கிறேன்' என்ற கருத்தைச் சொன்னார்கள். தற்போது அதுபற்றிய முழுத் தகவல் தனக்கு வந்திருப்பதாகவும், எனவே 'காலையில் நான் தெரிவித்த அந்தக் கருத்துக்களோடு தற்போது எனக்குக் கிடைத்திருக்கிற அந்த முழுத் தகவல்கள் அடிப்படையில் கூடுதலான சில விவரங்களையும் பேரவைக்குத் தெரிவிக்கிறேன்' என்றும் தெரிவிக்கிறார். அவருக்கு அனுமதி வழங்கி இருக்கிறேன். அந்தத் தகவல்களை பேரவைக்கு அவர் தெரிவிக்கலாம்.

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வே. தம்புசாமி அவர்கள் சில தகவல்களைக் கேட்டிருந்தார். திருச்சி மத்திய சிறையிலே சிறைக் கைதி ஒருவர் 5 ஆம் தேதி தாக்குதலுக்கு உட்பட்டு இறந்தது குறித்து அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதுகுறித்து ஏகெனவே சில தகவல்களை அளித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல. சிறப்புக் கவன ஈர்ப்பாக அதை நான் மாற்றியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்தார்கள். அதையொட்டி ஏற்கெனவே சில தகவல்களைச் சொல்லியிருக்கிறேன். அதனையொட்டி, அதனை வலிமைப்படுத்துகின்ற வகையில், மேலும் சில தகவல்களை உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி] [1995 மே 6

விசாரணை சிறைக் கைதி திரு. ஜாகிர் உசேன், தகப்பனார் பெயர் அப்துல் காதர், பாலக்கரை, திருச்சி மத்திய சிறைச்சாலையில் இறந்தது குறித்த விவரங்கள்.

4-5-1995 அன்று நடந்த பந்த்தை முன்னிட்டு முன்னெச்செரிக்கை நடவடிக்கையாக பாலக்கரை காவல் நிலைய குற்ற எண் 834/95-- ன் கீழ், இவர் கைது செய்யப்பட்டு, 2-5-1995 அன்று மதியம் 2.40 மணிக்கு திருச்சி மத்திய சிறைக்கு, அவருடன் சேர்த்து 20 பேர்களுடன் அனுப்பி வைக்கப்பட்டார். வாரண்ட்டில் 17 பேர்கள் தி.மு.க என்றும், 3 பேர்கள் எந்தக் கட்சியையும் சாராதவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து போராட்ட சிறைவாசிகளும் 3-5-1995 அன்றும், 4-5-1995 அன்றும் வெளி டாக்டர்களை வைத்து ஜெனரல் செக்--அப் செய்யப்பட்டனர். 4-5-1995 அன்று இரவு விசாரணை சிறைவாசி ஜாகிர் உசேன், தனக்கு மயக்கமாக உள்ளது எனக் கூறியதன் பேரில், சிறை டாக்டர்கள் பார்த்து பரிசோதித்ததில் ஜாகிர் உசேனுக்கு குறைந்த ரத்த அழுத்தம் (low blood pressure) மற்றும் அதிகமான நாடித் துடிப்பு, (ஹை பல்ஸ்) இருந்தது. அவர் ஏற்கனவே மோசமான நீரிழிவு நோய் உள்ளவர் என்றும் அறியப்பட்டது. டயபெடிஸ், திருச்சி அரசு பொது மருத்துவமனையில் 4-5-1995 இரவு 9 மணி அளவில் விசாரணை சிறைவாசி ஜாகிர் உசேன் அனுமதிக்கப்பட்டு, உள் நோயாளியாக இருந்தார். 5-5-1995 அன்று காலை 11 மணிக்கு பொது மருத்துவமனையிலே இறந்துவிட்டதாக 11.30 மணிக்கு மத்திய சிறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சிறையில் ஏற்பட்ட அடிதடிக்கும், இதற்கும் துளியும் சம்பந்தம் இல்லை. திருச்சி மத்திய சிறையில் 4-5-1995 அன்று மதிய சாப்பாடு தயாரித்து அளிக்க முற்பட்டபோது, சிறையின் உட்புறம் இருக்கும் சமையல் அறையிலிருந்து வெளிப்புறம் கொண்டு வரும்போது, உட்பகுதியிலிருந்த 3 ஆயிரம் விசாரணை சிறைவாசிகள் சாப்பாட்டை வெளியே எடுத்துச் செல்வதைத் தடுத்துள்ளனர். இதனால் வெளியேயிருந்த 5 ஆயிரம் விசாரணை சிறைவாசிகளுக்கு சாப்பாடு கிடைக்க தாமதம் ஆகிவிட்டது. இதனால் வெளியிலிருந்து விசாரணை சிறைவாசிகள் கற்களை எடுத்து அதிகாரிகள் மீது வீசினார்கள். அதில் திருச்சி சிறைத் துறை டி.ஐ.ஜி., கண்காணிப்பாளர் மற்றும் 5 காவலர்கள் அடிபட்டனர். மேலும் புதுக்கோட்டை சிறைக் கண்காணிப்பாளர் காலில் அடிபட்டு தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இரண்டு விசாரணை சிறைவாசிகள் அடிபட்டு சிறை டாக்டர்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு கவனிக்கப்பட்டு வருகிறார்கள். தற்போது நிலைமை கட்டுக்குள் உள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.